

Long-Term Care Home Update

Community Newsletter

Lakeridge Health

பெப்ருவரி 2021

## புதிய கட்டிடம் வடிவம் பெறுகிறது

ஏஜாக்ஸ் பிக்கறிங் வைத்தியசாலைக்கு அருகாமையில் தற்பொழுது கட்டடப்பட்டு வருகின்ற லேக்றிட்ஜ் ஆரோக்கிய அமைப்பின் புதிய நீண்டகாலப் பராமரிப்பு இல்லத்தை உருவாக்கும் பணியில் நாங்கள் நல்ல முன்னேற்றத்தை கண்டு வருகிறோம். இவ்வருடம் ஜனவரி மாதம் முழுவதும் கட்டமைப்புப் பணிக் குழுவினர் நிலம் தோண்டும் வேலையைத் தொடர்ந்து செய்து கட்டிடத்தின் அத்திவாரத்துக்கான காங்கிறிட் சீமெந்துக் கலவையினை ஊற்றும் பணியையும் முடித்துக் கொண்டனர். அத்துடன் இந்த ஸ்தலத்துக்கு அவசியமாக உள்ள நீர், மின் வழங்கும் சேவைகளை நிறுவும் வேலை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மின்சார விநியோகம் மற்றும் றூறாம் பிரதேசத்துக்கான பிரதம நிலக்கீழ் நீராதார மற்றும் கழிவு நீர் குழாய்களுடன் செய்யப்படும் இணைப்புகள் ஆகியன இவற்றில் அடங்கும்.

கட்டுமான ஸ்தலத்தில் நடைபெறும் வேலைக்குச் சமநேரப் பணிகளாக இதற்கு வெளியே உள்ள இன்னுமொரு இடத்தில் கட்டிடத்துக்கு உரிய துண்டுப் பகுதிகள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. எமது கட்டுமான வேலைப் பங்காளராக உள்ள PCL நிறுவனம் எமது கட்டிடத்துக்கு வேண்டிய பல்வேறு முன் உருவாக்கிய பாகங்களை வடிவாக்கம் செய்து அவற்றை நிறுவும் பணியினை மேற்பார்வை செய்து வருகிறது. சுமைதாங்கும் சுவர் வெட்டமைப்புத் தொகுதிகள், கழிவறைகளுக்கான நீர்வாய்கள் ஆகியவற்றுடன் பொறிமுறை மற்றும் மின்னியல் விநியோகத் தொகுதிகள் போன்றவை இவற்றில் அடங்கும்.



*நீண்டகாலப் பராமரிப்பு இல்லக் கட்டுமானம் – பெப்ருவரி2021*

இம்மாதிரியான துண்டுப் பகுதிகளை இணைத்துச் செய்கின்ற கட்டிட வேலை விரைவுபடுத்திய கட்டுமான முன்னோடித் திட்டத்தின் (Accelerated Build Pilot Program) ஓர் அம்சமாக அமைந்துள்ளது. இதன் மூலம் பாரம்பரிய முறையில் LTC நிறுவனம் கட்டிடம் அமைக்கும் வேகத்தைக் காட்டிலும் விரைவாக புதிய பராமரிப்பு இல்லத்தை உருவாக்குவது சாத்தியமாகிறது. அதே சமயம் ஆரோக்கியம்,பாதுகாப்பு மற்றும் கட்டமைப்பு ஆகியவற்றுக்கான நியமங்கள் மிகத் தீவிரமாக இப்பணியின் பொழுது பின்பற்றப்படும். இனிவரும் வாரங்களிலும் மாதங்களிலும் மண் அகற்றப்பட்டு, கட்டிடத்தின் துண்டுப் பகுதிகள் ஸ்தலத்துக்குக் கொண்டுவரப்பட்டு இணைக்கப்படும் பொழுது கட்டிடம் எழும்புகின்ற வேகம் துரிதமாக மாறுவதுடன் அது நிகழ்வதைக் கண்ணால் காணக் கூடியதாகவும் இருக்கும்.

## துவிச்சக்கர வண்டிகள் ஓடும் வரைவுப் பாதையை அணுகுவதில் மாற்றங்கள்

கட்டுமானப் பணி தொடர்ந்து நிகழ்ந்து வரும் இச்சமயத்தில் எமது சமூகத்து மக்களின் பாதுகாப்பினைக் கருதி மார்ச்சு1, 2021 திகதி தொடக்கம் Clement Street வீதியில் உள்ள துவிச்சக்கர வண்டி ஓடும் வரைவுப் பாதைகளை நாம் மூடவேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது. இது தொடர்பிலான அவசிய மாநகர நிருவாக ஒழுங்குகள் நிறைவேற்றப்பட்டு விட்டன. இவற்றை மீண்டும்





திறக்கும் காலம் பற்றிய தகவலினை எதிர்வரும் செய்தி மடல்களில் உங்களுக்கு அறிவிப்போம்.

## எமது வேலையை வழிநடத்த உதவும் மிகப்பயன்வாய்ந்த மீள்தரவு

எமது திட்டம் வளர்ந்து வரும் இந்நாட்களில் லேக்றிட்ஜ் ஆரோக்கிய சேவைத் தொகுதியின் சகல பகுதிகள் அடங்கிலும் இருந்து நாம் நிபுணத்துவ அறிவு மற்றும் வழிகாட்டும் தகவல் போன்றவற்றை தேடிப் பெற்று வருகிறோம். பல்வேறுபட்ட தேவைகள் மற்றும் திறன்கள் உடைய முதியோரின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை முன்னெடுக்கும் விதத்தில் இந்த இல்லத்தின் வெற்றிடங்களை எவ்வாறு சிறப்பாகப் பயன்படுத்தலாம் என்ற விபரங்களை அவர்கள் வழங்கி வருகின்றனர்.இப்பெரும்புல நோய் வந்த காலம் தொடக்கம் நாம் பெற்று வந்துள்ள உள்ளார்ந்த அறிவின் பின்னணியில் அதற்கு மேலும் மெருகூட்டும் விதத்தில் பராமரிப்பு, பாதுகாப்பு, தொற்றுக்கான கட்டுப்பாடு ஆகிய விடயங்களில் நாம் எதிர்பார்க்கும் உயரிய நியமங்களை இந்த இல்லம் பூர்த்தி செய்கிறது என்பதை நாம் உறுதி செய்வோம். அதேசமயம் இந்த இல்லம் இங்குள்ள வதிவாளர்கள், குடும்பங்கள், பணியாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் என்ற எல்லோருக்கும் பயன் தரும் சௌகரியமான, வீடு போன்ற ஒரு சுற்றாடலைக் கொடுக்கும் என்றும் நாம் எதிர்பார்க்கிறோம்.

எமது கட்டிட வரைவுக் குழுவினர், வேறு நீண்டகாலப் பராமரிப்பு அமைப்புகளில் உள்ள துறை நிபுணர்கள், நோய்த் தொற்று மற்றும் அதனைத் தடுக்கும் கட்டுப்பாடு விடயங்களில் ஆழ்ந்த அறிவுடையோர் மற்றும் உணவுச் சேவைகள், தகவல் தொழில்நுட்பம் போன்ற விசேடித்த அறிவுப் பிரிவுகளைச் சேர்ந்த அறிவாளர்கள் ஆகியோருடன் இணையம் வழியாகக் கலந்தரையாடி வந்துள்ளனர். இவற்றுக்கும் மேலாக எமது நோயாளர் மற்றும் குடும்ப (Patient and Family Experience Council), அனுபவ நெறியாக்க குழு Lakeridge Health அமைப்பின் துணைச் சேவைப் பகுதிகள், சமூக அறிவுரைக் குழுக்கள் ஆகியவற்றில் உள்ளவர்களும் எம்மை வழிநடத்தும் நோக்கத்துடன் தம்மிடம் உள்ள அறிபு மற்றும் வாழ்ந்து கண்ட அனுபவம் போன்றவற்றை எமக்கு வழங்கி வருகின்றனர். மேலும் இந்த மார்ச்சு மாதம் நாங்கள் இணையம் வழியாக நடைபெறும் மக்கள் கருத்தரங்கம் (virtual Town Hall) ஒன்றையும் நடாத்தத் திட்டமிட்டு வருகிறோம். இந்த நிகழ்ச்சியின் பொழுது எமது திட்டமிடல், கட்டுமானம் மற்றும் வடிவமைப்பு ஆகியன சம்பந்தப்பட்ட புதிய தகவல்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளுவோம். இதன் பொழுது நீங்கள் எங்களுடன் இணைந்து கொள்ளுவீர்கள் என்ற நம்புகிறோம். இது பற்றிய விபரங்கள் இச்செய்தி மடலில் கொடுக்கப்பட்டு உள்ளன.

இப்போது நிகழும் எமது வடிவமைப்பு அபிவிருத்திக் கட்டம் நிறைவேற்றம் பெற்ற பின்னர், நாங்கள் எமது இறுதியான முழுவிபரங்கள் அடங்கிய கட்டுமான ஆவணத் தொகுப்பினை தயாரிக்கும் பணியினை முடித்து விடுவோம். கட்டுமானக்



*Artist's Rendering*

குழுவினர் இனி எதனைக் கட்டி எழுப்புவர் என்ற விபரங்களை இந்த ஆவணத் தொகுப்பு துல்லியமாக விபரித்து நிற்கும்.

### எதிர்காலத்தை இன்று ஒருமுறை பார்த்துக் கொள்ளுங்கள் – முகநூல் (Facebook) செயலி வழியாக நேரடியாக நாம் ஒளிபரப்பவுள்ள மக்கள் கருத்தரங்கில் (Live Town Hall) கலந்து கொள்ளுங்கள்

புதிதாக வரவுள்ள பராமரிப்பு இல்லத்தினால் விளையும் நன்மைகள், அங்கு நீங்கள் காணக் கூடிய வசதிகள் மற்றும் சேவைகள் ஆகியன பற்றி கூடுதலாக அறிந்து கொள்ளவும் அத்துடன் அவை பற்றிய உங்கள் கருத்துகளை மீள்தரவாக எங்களுக்கு வழங்கவும் உங்களுக்கு விருப்பம் உள்ளதா? அப்படியானால் தயவு செய்து இம் மாதம் மார்ச்சு 18 ஆம் திகதி மாலை 6:30 முதல் 7:30 மணிவரையில் நாங்கள் நிகழ்த்தப் போகும் ஒரு முகநூல் மக்கள் கருத்தரங்கு (Facebook Live Town Hall). நிகழ்ச்சியில் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள். இதுபற்றி விரைவில் வரவுள்ள மேலதிக தகவலினை அறிந்து கொள்வதற்கு இந்த இணையப் பக்கத்தைப் பார்வையிடுங்கள்:
[Lakeridge Health's Facebook Page]

### அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

ஒரு நீண்டகாலப் பராமரிப்பு இல்லம் அமைக்கும் எமது செயல்திட்டம் பற்றிய கேள்விகளுடனும் மீள்தரவாக அமையும் தமது கருத்துக்களுடனும் எங்களை அணுகித் தொடர்பு கொண்டு வருகின்ற மக்கள் உங்கள் எல்லோருக்கும் எமது நன்றி. பொதுவாக உங்களால் கேட்கப்படும் சில கேள்விகளுக்கு இங்கு விடை தந்து இருக்கிறோம்:

**Q1. இப்பராமரிப்பு இல்லத்தின் அமைப்பு வேலைகள் எப்பொழுது பூர்த்தியாகும்?இங்கு எத்தனை வதிவாளர்களுக்கான படுக்கை வசதிகள் அடங்கி இருக்கும்?**

புதிதாக எழுகின்ற இந்த நீண்காலப் பராமரிப்பு இல்லம் ஏஜாக்ஸ் பிக்கறிங் வைத்தியசாலைக்கு

(Ajax Pickering Hospital) அருகாமையில் ஹார்வூட் அவன்யூ தெற்கு மற்றும் கிளிமென்ற்ஸ் வீதி மேற்கு ஆகியன குறுக்கிடும் சந்தியின் வடமேற்கு மூலையில் அமைந்து உள்ளது. இதற்கான கட்டுமான வேலை 2021ஆம் ஆண்டின் பிற்பகுதியில முடிவுறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த பராமரிப்பு இல்லத்தில் 320 படுக்கைகளுக்கான இடவசதி அமைந்து இருக்கும்.

**Q2. நான் ஏஜாக்ஸ் நகரில் வசிக்கும் ஒருவராக இருந்தால் இப்புதிய பராமரிப்பு இல்லத்தில் ஒரு இடத்தைப் பெறுவதற்கு எனக்குக் கூடுதலான வாய்ப்பு இருக்குமா?**

இப்புதிய இல்லம் திறக்கப்படும் பொழுது இந்த மாகாணம் அடங்கிலும் உள்ள எல்லா நீண்டகாலப் பராமரிப்பு இல்லங்களிலும் உள்ள படுக்கைகளுக்கு அனுமதி வழங்குவதற்கு உபயோகிக்கப்படும் மேலாண்மை முறையே பின்பற்றப்படும். மாகாண அரசினால் நிர்வகிக்கப்படும் ஓர் இடம் வழங்கும் செயல்முறையின் ஊடாக ஒன்ராறியோ மாகாணத்தில் வசிக்கின்றவர்களாகவும் தகைமை உடையவர்களாகவும் உள்ள எல்லோருமே எந்தவொரு பராமரிப்பு இல்லத்துக்கும் விண்ணப்பிக்க முடியும்.

இந்த இடம் வழங்கும் செயல்முறையில பல பரிசீலனைப் பகுதிகள் அடங்கி உள்ளன. இப்பகுதிகளில் ஒன்றின் பொழுது பராமரிப்பு ஒருங்கிணைப்பாளர் ஒருவர் சம்பந்தப்பட்ட நபருக்கு திருத்தமாகப் பதிவிடப்பட்ட ஒரு மருத்துவ வரலாறு இருக்கிறதா என்பதை உறுதி செய்வார். அத்துடன் நீண்டகாலப் பராமரிப்பு சேவையினைப் பெறும் தகைமை அந்த நபருக்கு இருக்கிறதா என்றும் தீர்மானம் செய்வார். பராமரிப்பு இல்லத்துக்கு அனுமதி பெறுதல் பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு தய்வு செய்து அழையுங்கள் தொலைபேசி எண் 310-2222 (பிரதேசக் குறியீடு/ area code இதற்குத் தேவையில்லை).

**Q3. புதிதாக வருகின்ற நீண்டகால பராமரிப்பு இல்லத்தில் நான் வேலை ஒன்று எடுப்பதற்கு எப்படி முயல வேண்டும்?**

வேலை வாய்ப்புகள் தோன்றும் பொழுது சுற்றுச் சமூகத்தின் மத்தியில் அறிவிக்கப்படும். புதிய இல்லத்தில் பணியாளராகப் பங்குபற்ற எப்படி விண்ணப்பிக்கலாம் என்ற தகவல் வழங்கப்படும்.

**Q4. புதிய நீண்டகால பராமரிப்பு இல்லத்துக்கு நான் ஒரு உற்பத்திப் பொருளை அல்லது சேவையை எப்படி வழங்க முடியும்?**

முன்மொழியப்படும் உற்பத்திப் பொருள் அல்லது சேவையின் வகையினைப் பொறுத்து, எமது பொதுவகை ஒப்பந்தக் காரராக உள்ள (PCL) நிறுவனத்துடன் செய்துள்ள கட்டுமான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் இருக்கும்அல்லது லேக்றிட்ஜ் ஹெல்த் அமைப்பில் நடைமுறையில் உள்ள கொள்வனவுச் செயல்முறைகள் வழியாக அது நடைபெறும்.

லேக்றிட்ஜ் ஹெல்த் அமைப்புக்கு பதிவு செய்யப்பட்ட ஒரு வியாபாரியாக இருக்க விரும்பினால் தயவு செய்து Plexxus, நிறுவனதில்



பதிவு செய்து கொள்ளுங்கள். எமது கொள்வனவுப் பணி ஒருங்கிணைப்பாளராக இவர்கள் இருக்கிறார்கள்.

**Q5. கட்டுமான ஸ்தலத்துக்குச் சமீபமாக வாழும் அயலவர்களுக்கு உண்டாகும் சத்தத்தின் அளவினை முடிந்த அளவு குறைப்பதற்கு என்ன செய்யப்படுகிறது?**

அயலிடப் பகுதியினருக்கு உண்டாகும் ஏதாவது சத்தம் அல்லது தாக்கத்தை முடிந்த அளவு குறைப்பதற்கு கட்டுமானப் பணிக் குழுவினர் தமது மிகச் சிறந்த முயற்சியை எடுத்து வருகின்றனர்.

சத்தம் தொடர்பிலான மாநகர சட்ட உபவிதிகளுக்கு அமைவாக நடப்பதற்கென்று PCL நிறுவனம் பல நடைமுறைத் திட்டங்களை நிறுவி உள்ளது:

- மண்புழுதியைக் கட்டுப்படுத்தல் உள்ளடங்கிய ஆரோக்கியம், பாதுகாப்பு, சுற்றாடல் தொடர்பிலான கரிசனங்கள் யாவும் பற்றி உரிய நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு திட்டம்.
- கட்டிடப் பொருட்களை ஸ்தலத்தில் தரையிறக்குதல் மற்றும் வாகனங்களை ஒரு புறமாக நிறுத்துதல் போன்ற தேவைகளுக்காக, கட்டிட ஸ்தலத்துக்கு இட்டுச் செல்லுகின்ற மற்றும் அதிலிருந்து வெளியேறும் பாதைகளில் வாகன நெருக்கடியை குறைக்க விசேட கட்டுப்பாடு.
- கட்டிட வேலையினால் விளையும் சத்தம் தொடர்பிலான சட்ட உபவிதிகளுக்கு அமைவாகச் செயற்படுவதற்குரிய திட்டங்கள்.

எமது சமூகத்துக்கு முக்கியமானதும் மிக அவசியமானதும் ஆகிய இந்த நீண்ட காலப் பராமரிப்பு இல்லத்தினை முடிந்த அளவு விரைவாக கட்டி முடிப்பதற்கு நாம் உழைத்து வருகின்ற இச்சமயத்தில், கட்டுமான ஸ்தலத்துக்கு மிகச் சமீபமாக வாழுகின்ற அயலிடப் பொதுமக்கள் காட்டி வந்துள்ள புரிந்துணர்வினை நாம் பெரிதும் மதிக்கிறோம்.

இக் கட்டிட அமைப்புத் திட்டத்தின் கால ஒதுக்கீட்டு அட்டவணை விரைவான ஒன்றாகவே இருக்கிறது. இதனால் இப்புதிய பராமரிப்பு இல்லத்தின் கட்டிட வேலை 2021 ஆண்டின் பிற்பகுதியில் முடிந்து விடும்.

இவ்வருடம் மார்ச்சு மாதம் 22ஆம் திகதி தொடக்கம் கட்டிட ஸ்தல வேலையில் பணியாற்றுவோர் திங்கள் தொடக்கம் வெள்ளி வரையில் காலை 6:30 மணி தொடக்கம் நள்ளிரவு வரையில தமது கடமையில் ஈடுபடுவர். சனிக்கிழமை நாளில் காலை 6:30 மணி தொடக்கம் மாலை 5:00 மணி வரையில பணியாற்றுவர்.

## உங்களுக்குப் புதிய தகவல் வழங்குதல்

எனது பணியின் முன்னேற்றம் பற்றி நாங்கள் இச் செய்தி மடல் மூலமாகவும் எமது **இணையத்தளம்** website. வழியாகவும் உங்களுக்குத் தொடர்ந்து தகவல்களை வழங்கி வருவோம்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உங்களிடம் கேள்விகள் உண்டென்றால் அல்லது மேலதிக தகவல் தேவைப்பட்டால் தயவுசெய்து அழையுங்கள். தொலை பேசி எண்: 905-576-8711 தெடரெண் 34167 அல்லது மின்னஞ்சல் முகவரி AjaxLTC@lh.ca.

நீங்கள் எம்மை Twitter மற்றும் Facebook. வழியாகவும் பின்தொடர முடியும்

## டுறாம் சமூகப் பெருமக்களுக்குப் புதிதாக வந்தடையவுள்ள இந்த இல்லம் பற்றிய விடயத்தில் நீங்கள் காட்டும் ஆர்வம் மற்றும் ஆதரவுக்கு நாம் நன்றி கூறுகிறோம்!

Lakeridge Health